மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(இ) ஆம். குடிசைகள் 14—8—1980 அன்று தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய புலனாய்வுப் படையினரால் அகற்றப்பட்ட பின்னரும், ஆக்கிரமிப்பாளர்களால் குடிசைகள் போடப்பட்டன. ஆனால் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் அலுவலர்கள் எச்சரிக்கை விடுத்த பின்னர், அவர்களாகவே குடிசைகளைப் பிரித்துக்கொண்டனர். இப்பொழுது எந்த ஆக்கிரமிப்பும் இப்பகுதியில் இல்லை.

(உ) மேற்படி ஆக்கிரமிப்பிற்கு எவரும் அனுமதி அளிக்கவில்லை.

THIRU A. R. DAMODARAN : Sir, in view of the frequent encroachment on road margins and Government lands, may I know whether the Government will consider having a special squad attached to the Slum Clearance Board to remove these encroachments before they become permanent hutments ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆங்கிலத்தில் "ஸ்பெஷல் ஸ்குவாட்" என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைத்தான் "புலனாய்வுப் படை" என்று நான் தமிழில் சொன்னேன். புலனாய்வுப் படை இருக்கிறது, அது இயங்குகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அரசுக்குச் சொந்தமான காலியிடங்களில் இதைப்போல குடிசைகள் உருவாகாமல் இருக்க இந்த இடங்களை காலியாக வைக்காமல், பூங்காக்களையும், கார் நிறுத்தும் இடங்களையும் ஏற்படுத்தும் யோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இந்தக் கேள்வியை உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டுமென்று கருதுகிறேன்.

மண்டல மாணிக்கம் அணைக்கட்டு.

*85 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980, ஆகஸ்டில், இராமநாதபுரம் மாவட்டம், கமுதி பகுதியில் மண்டல மாணிக்கம் என்னும் ஊருக்கருகே உள்ள அணைக்கட்டு இடிந்து விட்டது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தொடர்பாக அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(உ) அவ்வணை எந்த ஆண்டு கட்டப்பட்டது ?

(எ) அணை கட்டுவதற்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டது ?

[1981 பிப்ரவரி 26

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : (அ) & (இ) 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் இராமநாதபுரம் மாவட்டம் கமுதி பகுதி மண்டலமாணிக்கம் அணைக்கட்டிற்குச் சேதம் ஏதும் ஏற்படவில்லை. ஆனால் மண்டலமாணிக்கம் கண்மாயின் கரையில் அமைக்கப்பட்டிருந்த ' மண் கொரம்பு " (Mud Korambu) வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது. சேதமடைந்த பகுதியை சரி செய்யும் வேலை மேற்கொள்ளப்பட்டு, முடியும் தருவாயில் உள்ளது.

(உ) & (எ) இந்த அணை 1976 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. செலவு ரூ. 8,30,570.

திரு. ம. சங்கரலிங்கம் : இந்த அணை உடைபடவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னாலும், அதில் வேறு ஒரு பகுதியில் உடைப்பு ஏற்பட்டு இப்போது சீர் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். 1976-ல் கட்டப்பட்டது. இவ்வளவு விரைவில், அதாவது 1980-க்குள் உடையக்கூடிய காரணம்பற்றி ஆராயப்பட்டதா? ஏனென்றால் இதனால் அந்தப் பகுதியில் உள்ள ஏழு, எட்டு கிராமங்களில் உள்ள பாசனம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன மாற்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டபோது, வறண்ட பகுதி, பிற்பட்ட பகுதி என்று சொல்லப்பட்ட இராமநாதபுரம் பகுதியிலே கட்டுமான அணைகளில் உடைப்பு ஏற்பட்டதை நாம் அறிவோம். அந்தமாதிரி அணைகளுக்கு ஒரு ஆபத்தும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக மண் கொரம்பு அமைக்கப்பட்டதாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் உடைப்பு ஏற்பட்டது பொறியாளர்களின் தவற்றின் அடிப்படையிலா அல்லது காண்ட்ராக்டர்களின் தவற்றின் அடிப்படையிலா என்று அரசு விசாரித்திருக்கிறது. அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வேண்டிய உதவி வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்தப் பிரச்சினை இல்லை. இப்போது மண் கொரம்பு வலுவாக அமைக்கப்பட்டு வருகிறது. வேலை முடியும் தருவாயில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மண் அணை போட்டதனால்தான் உடைக்கப்பட்டது என்றும் இப்போது வலுவாக அமைக்கப்படுகிறது என்றும் சொல்கிறார்கள். இப்போது மண் வைத்து அமைக்காமல், சிமிண்ட்டு, கல் அல்லது சுண்ணாம்பு போன்றவைகளை வைத்து கொரம்புகள் அமைத்து நல்ல முறையில் செய்ய அரசு முயற்சிகள் எடுத்துக்கொள்ளுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.